பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 ஆடி 19 ஞாயிறு: 17 இதழ்: 173
யாழ்ப்பாணம் புதன்கிழமை 3-8-77

# 'டைம்ஸ்' நிறுவனத்தை அரசு பொறுப்பேற்கிறது!

கொழும்பு, செவ்.

கொழும்பிலுள்ள 'டைம்ஸ்' பத்திரிகை நிறுவனத்தை அரசாங்கம் சுவீகரிக்கும்.

இது சம்பந்தமான அறிவிப்பொன்று இன்று பிரதம மந்திரியின் அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்டது.

''டைம்ஸ் பத்திரிகை நிறுவனத்தின் பத்திரிகைகளைத் தொடர்ந்து வெளியிடவும் இந்த ஸ்தாபனத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் பாதுகாப்பு அளித்து அவர்களுக்குரிய பல்வேறு கொடுப்பனவுகளையும் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டே வியாபாரச் சுவீகரிப்புச் சட்டத்தின்கீழ் இந்த ஸ்தாபனத்தை பொறுப்பேற்க அரசு தீர்மானித்துள்ளது'' என்று பிரதம மந்திரியின் அலுவலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்களினது பல கோடி ரூபா மற்றும் வெளியாருக்குச் சேரவேண்டிய பணம் வழங்கப்படாமலிருக்கிறது. இவற்றை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறும் இந்த அறிக்கையில் ''இந்த ஸ்தாபனம் முதலில் சுவீகரிக்கப்பட்டு தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரின் கீழ் நிர்வகிக்கப்படும் என்றும் இதன் பின்னர் மக்களுக்குச் சொந்தமான கம்பனி ஒன்றிடம் கையளிக்கப்படும்'' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(முன்வந்த செய்தி 2-ம் பக்கம்)

## சட்டசபைக்கு வந்த 'உப்பு'!

சென்னை, ஆக. 2

இன்று நடைபெற்ற தமிழக சட்டசபைக் கூட்டத்தில் சூடான விவாதத்துடன் சில சுவையான சம்பவங்களும் இடம் பெற்றன.

பட்ஜட்மீதான விவாதத்தில் பேசிய தி.மு.க. அங்கத்தவர் ஒருவர் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இந்த முக்கிய விவாதத்தில் ஏன் கலந்துகொள்ளவில்லையென்று கேள்வி எழுப்பினர். இதற்கு சபாநாயகர் திரு முனு ஆதி பதிலளிக்கையில்; முதலமைச்சர் உடல் நலம் குறைவாக இருக்கின்றார் என்றும், சட்டசபைக் கூட்டத்திற்கு நாளை வரலாம் என்றும் கூறினர்.

தி.மு.க.வைச் சேர்ந்த திரு. அன்பழகன் ஒரு கட்டத்தில் பேசுகையில் பட்ஜட் யோசனைகளில் உப்பு இல்லையென்றும் பட்ஜட் சப்பாக இருக்கிறது என்றும் கூறியபோது அ.இ.அ.தி.மு. கழக உறுப்பினர் ஒருவர் எழுந்து; முன்னைய அரசு மக்களை நோயாளிகளாக்கிவிட்டுச் சென்றுவிட்டது என்றும் இதனால் இந்த நோயாளர்களுக்கு உப்பு இல்லாத மருந்து அருமருந்தை நமது அரசு இப்போது வழங்கியுள்ளது என்றும் விளக்கியதும் சபையில் சிரிப்பொலி கிளம்பியது.

# சுதந்திரக்கட்சி தனியே இயங்கும்

## வன்செயல்களுக்கு கட்சிக்குழு கண்டனம்

கொழும்பு, செவ்வாய்

தேசிய அரசு பேரவையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற குழு தனித்து இயங்குவதென நேற்று முடிவுசெய்துள்ளது. மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா பாராளுமன்ற கொறடாவாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு ரோஸ்மீட் பிளேஸிலுள்ள திருமதி சிறிமா பண்டாரநாயகா இல்லத்தில் நேற்று சுதந்திரக்கட்சி பாராளுமன்றக்குழு கூடியது. இக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த 8 எம்.பிக்களும், மற்றும் முன்னாள் அமைச்சர்கள் சிலரும் சுதந்திரக்கட்சிப் பிரமுகர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

சுதந்திரக்கட்சித் தலைவராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே தொடர்ந்து இயங்குவார் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த தேர்தலில் ஹரிஸ்பத்து தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு. ஜோன் அரியவன்சா சுதந்திரக் கட்சியில் சேர்ந்துகொண்டார். இவரும் நேற்று நடந்த கூட்டத்தில் கலந்துகொண்டார். தேசிய அரசுபேரவையில் இவர், சுதந்திரகட்சி [illegible]ழுவில் இருப்பார்.

### வளர்ச்சியில் அக்கறை

சோஷலிச சமூக அமைப்பை ஏற்படுத்த கட்சி தொடர்ந்து இயங்க வேண்டும் என்றும் கடந்த தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்ட அபேட்சகர்கள் தங்கள் தொகுதிகளில் புதிய கிளைகளை ஆரம்பித்து கட்சியின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்ததேர்தலில்பயமுறுத்தலுக்கும் வன்செயலுக்கும் மத்தியில சுதந்திரக்கட்சிக்கு ஆதரவளித்தவர்களுக்கு நன்றி தெரிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### கண்டனத் தீர்மானம்

தேர்தலின்பின் நாட்டில் நடந்த வன்செயல் சம்பவங்களைப் பலமாக கண்டிப்பதென்ற தீர்மானமும் நிறைவேறியது.

நாடுமுழுவதற்கும் தேசியத் தலைவராக விளங்கிய அமரர் பண்டாரநாயக்காவின் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து நாட்டுமக்களுக்குச் சேவைசெய்வதென்ற தீர்மானமும் நிறைவேறியது.

இக்கூட்டத்தில் முன்னாள் தபால் விடமைப்பு நிர்மாண துறை அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் கலந்துகொண்டார். (ம)

## திறந்திருக்கும் கதவுகள்

(கொழும்பு,செவ்வாய்)

பிரதமரின் அலுவலகத்தின் வாசல்கதவுகள் இப்பொழுது திறந்துவிடப்பட்டிருக்கின்றன.

இதனுடன் வாசலில் முன்னர் நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்தினர் வாபஸ் பெறப்பட்டுள்ளனர். பொலிசார் மட்டுமே சேவையிலுள்ளனர். இக்கதவுகள் முன்னர் மூடியே வைக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. [ம]

ஆயுர்வேத அபிவிருத்திக்கு

## அரசியல் வேறுபாடற்ற ஆலோசனைகள் ஏற்கப்படும்

– பிரதி அமைச்சர்

கொழும்பு, செவ்வாய்

ஆயுள்வேத மருத்துவம் அரசியல் வேறுபாடற்றவகையில் அபிவிருத்தி செய்யப்படும் என்று பிரதி சுகாதார அமைச்சர் திரு. தர்மசேன ஆட்டிகல தெரிவித்தார்.

ஆயுள்வேத வைத்திய அபிவிருத்திக்கு சகலரிடமிருந்தும் அரசியல் வேறுபாடற்ற ஆலோசனைகளும் சிபார்சுகளும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

ஆயுள்வேத திணைக்களத்தின் உயர்அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியபின்னர் ஆயுள்வேதத்துறையில் அனுபவம் மிக்க ஒருவர் ஆயுள்வேதக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்படுவார் என்றும் பிரதிஅமைச்சர் தெரிவித்தார். (இ)

## இந்த ஆசிரியர்கள்நிலைபற்றி அமைச்சு ஆராய்கிறது

கொழும்பு, செவ்.

தேசிய அரசுபேரவை கலைக்கப்பட்டபின் நியமனம் வழங்கப்பட்ட 16,000 ஆசிரியர்களின் நிலைபற்றிக் கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்தின, மே 18ம் திகதி தேசிய அரசுப் பேரவைகலைக்கப்பட்டபின் வழங்கப்பட்ட நியமனம், இடமாற்றம் பற்றிப் பூரண அறிக்கை கோரியுள்ளார்.

800 சிங்கள ஆசிரியர்களும் 500 தமிழ் ஆசிரியர்களும், 300 முஸ்லிம் ஆசிரியர்களும் மே 18ம் திகதிக்குப் பின் நியமனம் பெற்றுள்ளார்கள் எனக் கூறப்படுகிறது. (க-அ)

# வர்த்தக சட்டுப்பாடற்ற பிரதேசம்எங்கே அமையும்?

## இன்னும் தீர்மானிக்க வில்லையாம்

கொழும்பு, செவ்

அரசாங்கம் உத்தேசித்துள்ளவிசேடவர்த்தகக்கட்டுப்பாடற்ற பிரதேசம் எங்கே அமைக்கப்படுமென்பது இன்னும் உத்தியோக பூர்வமாக தீர்மானிக்கப்படவில்லை என்று வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதி இறக்குமதி வசதிகளுடன் கப்பல், விமானப் போக்குவரத்து வசதிகள் கொண்ட இடத்திலேயே இப்பிரதேசம் அமைக்கப்படுமென்று அமைச்சர் கூறினர்.

வெளிநாட்டு மூலதனங்களைக்கொண்ட பல தொழிற்சாலைகளை நிறுவும் அரசியல் ஊடுருவல் அற்ற விசேட வர்த்தகக் கட்டுப்பாடற்ற பிரதேசம் ஒன்றை அமைக்கவே அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. தீர்வையற்ற துறைமுகத்தை அரசு ஒருபோதும் அமைக்க மாட்டாது என்றும் அமைச்சர் கூறினர்.

உத்தேச பிரதேசத்தில் சோஸலிசநாடுகள் உட்பட

( ம் பக்கம் பார்க்க)

## இன்று விவசாய இரவு!

யாழ். ரோட்டறி காணிவலும் பொருட்காட்சியும்

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு "விவசாயிகள் இரவு"டன் விசேட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

- அகில உலக தவில்மேதை லயஞானகுபேரபூபதி அமரர் வி. தெட்சணாமூர்த்தி அவர்களின் புதல்வன் வீ. ரி. உதயசங்கர் குழுவினரின் தவில் கச்சேரி.
- இணுவில் இராதாகிருஷ்ணன் குழுவினரின் வயலின் சோலா கச்சேரி.

கண்டுகளிக்கத் தவறாதீர்கள்!

### மணிவாக்கு

பேசுவதோ, பேசாதுவிடுவதோ என மனம் ஊசலாடும்போது, பேசுவதற்குப் பதிலாக மௌனமாயிருக்க வேண்டும். --காந்தி மகான்.

ஈழநாடு
THE EELANAADU

# ஊழல் ஒழிப்பு

உணவு, உடை, உறையுள்.

இவைதான் ஒரு மனிதனின் அத்தியாவசியத் தேவைகள்.

எந்தப் பிரச்னையும் இவற்றின் அடிப்படையிதான் ஆரம்பமாகின்றன.

1970ம் ஆண்டில் மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இப்போது நடந்துமுடிந்த பொதுத்தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியாகக்கூட வரமுடியாதபடி படுதோல்வி அடைந்ததற்கும் மக்களின் அத்தியாவசியத் தேவைப் பிரச்னைதான் காரணம்.

எந்தக் கட்சியும் ஆட்சிபீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டதும் மகிழ்ச்சிப் பெருமிதம் அடைவது வழக்கம்.

அமைச்சர்களாகப் பதவியேற்றதும் தாங்கள் ஏதோவெல்லாம் செய்யத்திட்டம் வைத்திருப்பதாகவும் அவற்றைச் செயல்படுத்திச் சகல பிரச்னைகளுக்கும் தீர்வு காணப்போவதாகவும் சொல்வதும் வழமைதான்.

ஆனாலும் இப்போது மிகப், பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடத்தில் அமர்த்தப்பட்டுள்ள அரசாங்கம் தாம் ஆட்சிக்கு வருவது நிச்சயம் என்ற தன்னம்பிக்கையுடன் முன்னரே திட்டங்களை வகுத்து அவற்றைச் செயல்படுத்துவதற்குத் தயாராக வந்திருப்பதாகவே தோன்றுகிறது.

இதேசமயம் நாட்டில் சீரான நிர்வாகத்துக்கும் ஊழல்களையும் மோசடிகளையும் ஒழித்துக்கட்டுவதற்கும் அரசாங்கம் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறதென்ற நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.

அமைச்சர்கள், பேரவை உறுப்பினர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள் ஆகியோருக்கென ஒழுக்க நெறிக்கோவை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மேலிடத்தில் உள்ளவர்கள் நல்ல முறையில் நடந்தால் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் சரியான முறையில் நடந்துகொள்வார்கள் என்பதை எடுத்துக்காட்டவே இந்த ஒழுக்க நெறிக்கோவையாகும்.

இந்த ஒழுக்க நெறிக்கோவையில் ஓர் அம்சம் பேரவையில் உறுப்பினர்களாகப் பதவிப்பிரமாணம் செய்ததும் தங்கள் சொத்துக்களைப் பிரகடனம் செய்யவேண்டுமென்பதாகும்.

அமைச்சர்கள், பேரவை உறுப்பினர்கள் தங்கள் சொத்துக்களைப் பிரகடனம் செய்யவேண்டுமென்று முன்னைய அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருந்தது. ஆனாலும் அது செயற்பட்டதாகத் தெரியவில்லை.

மக்களின் தேவைகள் சரிவர நிறைவேற்றப்படுவதற்கு ஊழல்களும் மோசடிகளும் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.

முன்னாள் பிரதமர் திருமதி சிறீமா பண்டாரநாயகா ஆட்சிபீடத்துக்கு வந்ததும் லஞ்சமும் ஊழலும் எங்கும் மலிந்திருப்பதாகத் தெரிவித்து அதை ஒழித்துக்கட்டுவதே தமது வேலை என்று தெரிவித்திருந்தார்.

பேரவை உறுப்பினர் ஒருவர் ஒரு அரசாங்கத் திணைக்களத்தில் செய்யமுடியாத ஒரு வேலையை ஒரு பியூனைக் கொண்டு செய்துமுடிக்கக் கூடியதாக ஊழல் மலிந்திருக்கிறதென்று அன்று திருமதி சிறீமா பண்டாரநாயகா கூறியிருந்தார்.

ஆனால் இன்று முன்னைய அரசாங்கத்தின் காலத்தில்தான் ஊழல் நிறைந்துள்ளதாக இப்போது கூறப்படுகிறது.

இந்த ஊழல்கள் பற்றி விசாரணை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதேநிலை அடுத்த தேர்தலின் பின்னும் ஏற்படக் கூடாது. அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் செயல்படவேண்டும்.

# ஊர்வலம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அரசாங்க கட்டட திணைக்களத் தொழிலாளருக்கு இடைநிறுத்த அறிவித்தல் வழங்கப்படுவது, வேலைகளை மீண்டும் சொந்த ராத்து முறையில் கொடுப்பதற்காகவே என்ற அச்சம், தொழிலாளர் மத்தியில் எழுந்துள்ளது.

கடந்த 1ம், 2ம் தேதிகளில் கட்டடப்பொருள் தட்டுப்பாடு என்ற காரணம்காட்டி தற்காலிக நிலையிலிருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை இடைநிறுத்த அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. இதற்குத் தொழிலாளர் மத்தியில் பலத்த எதிர்ப்புத் தோன்றியுள்ளது.

தொழிலாளருக்கு தொடர்ந்து இடைநிறுத்த அறிவித்தல் வழங்கப்பட்டால் நாட்டிலுள்ள 16,000 தொழிலாளர் வேலையிழப்பர் என்ற அச்சம் தொழிலாளர் மத்தியில் தோன்றியுள்ளது.

இதனை ஆட்சேபித்து யாழ். வளாக கட்டடத் திணைக்கள வேலைத்தலத்திலிருந்து கட்டட திணைக்கள மாவட்ட பொறியியலாளர் அலுவலகத்திற்கு, தொழிலாளர் நடாத்தவிருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது.

அரசாங்க கட்டட சேவையாளர்சங்க யாழ். கிளையினர் மாவட்ட பொறியியலாளருடன் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து இணக்கம் ஏற்பட்டுள்ளது. (உ)

# இன்று சஷ்டியப்தபூர்த்தி

வேலணை, புதன்

புங்குடுதீவு தல்லையபற்று ஸ்ரீசங்கர முருகமூர்த்தி கோவிலின் பிரதமகுரு சிவஸ்ரீ நா. சின்னத்துரைக் குருக்களின் அறுபதாண்டு பூர்த்திவிழா இன்று கொண்டாடப்படவிருக்கின்றது. இவ்விழாவில் நல்லைஆதீன குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ கே. சீதாராமசாஸ்திரிகள், நியாய சிரோன்மணி பிரம்மஸ்ரீ கே. சுப்பிரமணிய சாஸ்திரிகள், கிரியா சிரோன்மணி பிரம்மஸ்ரீ கே. நாராயண சாஸ்திரிகள் ஆகியோர் ஆசி வழங்குவர். (அ)

# பேரவை: எதிர்க்கட்சி அதன் பொறுப்பு

**தேசிய அரசுப் பேரவையில் எதிர்க்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி விளங்கப்போகிறது. பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாக நாட்டின் பொதுநலனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டிய அதே சமயம் தமிழ்இனத்தின் உரிமைகளுக்காகத் தமிழ் ஈழக் கோரிக்கையையும் முன்வைத்துச் செயற்படவேண்டியகடமையும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்துள்ளது. எதிர்க்கட்சியின் பொறுப்புப் பற்றி இந்தக் கட்டுரைத் தொடர்விளக்கமாக எடுத்துக் கூறுகிறது. [ஆ-ர்]**

கிரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்பது நம் தமிழ்ப் பழமொழி. இவ்வாசகத்தின் பொருள் மிக்க எளிமையானதாயினும் இது மக்களின் அன்றாட வாழ்வின் சாதாரண நடவடிக்கைகளுக்கு மட்டுமன்றித் தேசிய அரசுப் பேரவை மட்டத்திலான செயற்பாடுகளுக்கும் அதன் கடினத் தத்துவங்களுக்கும் ஏற்புடைத்தான கருத்தாகும் என்பதனைச் சனநாயகஅரசியலமைப்பு வரலாறுகள் எண்பிக்கின்றன.

சனநாயக அரசியலமைப்பிலே சனநாயகமானது, பரந்ததும் சமத்துவமான வாக்குரிமையில் மட்டுமே தங்கியுள்ளதாக எண்ணப்படலாகாது; இது, வாக்குப் பெட்டிகளின் மூலம் காட்டப்பட்ட வாக்காளரின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கச்செய்யும் வகையில் இயங்கும் அரசாங்க யந்திரத்தின் செயற்திறன் எதிர்க்கட்சியென்னும் சூத்திரத்தால் செவ்வை பார்க்கப்பட்டாலன்றி அதனால் நாட்டிற்குப் பயனளிக்கக்கூடிய வகையில் எத்துரும்பையும் அசைத்துவிட்டதாகக் கருதவியலாது. இதனை இன்னொரு வகையாகக் கூறின், அரசாங்கம் ஒரு விடயத்தைத் தீர்மானிக்கின்றது; எதிர்க்கட்சி அதனை விமர்சிக்கின்றது. இரு கட்சிகளுமே தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் வாக்காளரின் எண்ணத்தை அல்லது அபிப்பிராயத்தை இந்த வகையில் வெளிப்படுத்துகின்றன எனலாம்.

மேற்கண்ட கூற்றிலிருந்து அரசாங்கம் பிரேரிக்கும் எந்த விடயத்தையும் எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சியின் வேலை என எண்ணிவிடலாகாது. அரசின் பல பிரேரணைகள் எதிர்க்கப்படாமலும் அல்லது விமர்சிக்கப்படாமலும் தப்பியிருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் பிரேரணையொன்று எதிர்க்கட்சியால் எதிர்க்கப்படாதவேளையிலும் அதன் ஆழ்ந்த கருத்துச் செறிவான விமர்சனங்களுக்குத் தப்பமுடியாமற் போனதுமுண்டு. ஆயினும் நம் நாட்டைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சியினரின் வேலை, அரசாங்கம் தனது கொள்கைத் திட்டத்தைச் செயற்படுத்தவிடாது தடுப்பதுவல்ல. ஆனால் அடுத்த சந்தர்ப்பத்தில், அதாவது அடுத்த பொதுத்தேர்தலில் வாக்காளர்கள் வேறொரு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பார்கள் என்னும் நம்பிக்கையில் அக்கொள்கைத் திட்டத்தை விமர்சிப்பதுவாகும். எனவே அத்தேர்தலில் அரசாங்கக்கட்சியானது, வாக்குகளையும் மக்களிடையே நற்பெயரையும் இழக்கும் வகையில் அவ்வரசின் தீர்மானங்களில் எது விமர்சனத்துக்குரியதாக இருக்கின்றதோ அதனை விமர்சிப்பதையே எதிர்க்கட்சி தன் நோக்கமாகக் கொண்டு வந்திருக்கிறது.

## கொள்கைகளை விமர்சிக்கும் சந்தர்ப்பம்

தேசிய அரசுப் பேரவையின் பெரும்பாலான வேலைகள் அமைச்சர்கள் சமர்ப்பிக்கும் சட்டமூலங்களை அல்லது அரசாங்கக் கட்சியினரின் பிரேரணைகளை விவாதிப்பதிலேயே கழிகின்றன. இச்சந்தர்ப்பங்களே எதிர்க்கட்சி, அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்கவும் அரசாங்கம் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும் பயன்படுகின்றன. எது எவ்வாறிருப்பினும் சனநாயகஅரசியல்முறையிலே எதிர்க்கட்சி தார்மிக உணர்வுடன் செயலாற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வகையில், பேரவைக்கடமைகளில்எதிர்க்கட்சியிடமுள்ள மகத்தான பொறுப்புகளில் முதன்மையானது, நேரான, ஒடுக்கமான பாதையில் நேர்மையான நிர்வாகத்தைச் செய்ய அரசாங்கத்தை இட்டுச்செல்வதாகும். அடுத்ததாக, அரசாங்கம் தன் கொள்கைகள் பற்றிவிளக்கம் செய்யவும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும்இடமளிப்பதுவாகும். இதிலிருந்து ஒரு எடுகோள் பிறக்க ஏதுவுண்டாகிறது. சிறுபான்மையினம் ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவொன்று பிரதான எதிர்க்கட்சியாகவிளங்குமிடத்து அங்கு ஒலிக்கும் அதன் குரல், சர்வதேச அரசியல் வானிலே சிறுபான்மை இனங்களாக ஒடுக்கப்படும் மக்களின் ஏகோபித்த குரலாக முழக்கமிடல் வேண்டும். நாட்டின் தேசியத்தேவைகளை ஒட்டிய பிரச்னைகளில் பங்குபெறுது அது ஒதுங்கியிருக்குமேயானால் அச்செயல் மிகப் பிற்போக்குத்தனமானது மட்டுமல்லாது தற்கொலைக் கொப்பானதுமாகும்.

பேரவையில் இராட்சதப் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் அரசாங்கம் எதிர்க்கட்சியின் விமர்சனக் கணைகளுக்கு அல்லது உரிமைக்குரலுக்குப் பதிலளிப்பதிலும் பார்க்க அவைகள் எழவே முடியாது. அமுக்கிவிடக்கூடிய பலமுடையதாகின்றதே என இவ்வேளையில் அச்சமடைய இடமுண்டாகிறது. இதனையே எதிர்க்கட்சியினருக்கு அச்சமூட்டும் பெரும்பான்மை என்கிறோம். இது ஒருவகையில் உண்மையே [illegible] இங்ஙனமே எதிர்க்கட்சி தொடர்ந்து நசுக்கப்பட்டு, அரசின் வாக்குப்பலத்தால் வீழ்த்தப்படுமானால் வெகு விரைவிலேயே பெரும்பான்மையினரின் சர்வாதிகாரம் தாபிக்கப்பட்டு விடுதலுமுண்டு. இந்தவகையான அபிப்பிராயம் இன்னமும் செல்வாக்குப்பெறவில்லை யென்றே கூறலாம். எனினும் எப்போதுமே அரசாங்கம் தனது இப்பெரும்பான்மைப் பலத்தைக் காப்பாற்றிக்கொள்ளவே முயலும். அதேவேளை எதிர்க்கட்சியானது அப்பலத்தை எவ்வாறுயினும் முறியடிக்கவே முயற்சிக்கும். இதற்கான ஆயுதமாகப் பொதுசன அபிப்பிராயம் பெரிதும் பயன்பட்டு வந்திருக்கிறது. இதனைக் காலப்போக்கில் தனக்கு சாதகமாக்கிக்கொள்ளவும் அப்பலத்தின் துணைகொண்டு தனது கோரிக்கைகள் - பிரேரணைகள் தொடர்பில் அரசின் கண்ணியமான மனிதாபிமானம்மிக்க அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளவும், இன்னும் விசேடமாகக் கூறின் உலக நாடுகளின் அனுதாபத்தையும் இவற்றின் மீதான அவைகளின் அக்கறையையும் தன்பால் ஈர்த்துக் கொள்ளவும் இயலும்.

எதிர்க்கட்சி எனப்படுவது எதிர்க்கட்சி என்பதல்ல. அத்துடன், எதிர்க்கட்சித் தகமை என்பது வேறு, எதிர்க்கட்சித் தலைமை என்பது வேறு. பொறுமையும் புத்திநுட்பமும் ஆற்றலும் அரசியல் சாணக்கியமும் ஒருங்கே அமையப் பெற்றவர் இத்தலைமையை ஏற்கும்போது, அரசாங்கம் எத்துணைப்பலம் பொருந்தியதாக இருப்பினும், நாட்டின் எல்லா இனங்களினதும் எதிர்கால சுபீட்சத்துக்கான பங்களிப்பிலும் தலைமைப் பதவி அவரையே சாரும்.

ச. இராஜகோபாலன்
சட்டத்தரணி

# 'டைம்ஸ்' கட்டிடம் ஏலம் போகிறது!

கொழும்பு, செவ்வாய்

கொழும்பிலுள்ள 'டைம்ஸ்' பத்திரிகை நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள் இம்மாதம் 28-ம் தேதி ஏலத்தில் விற்பனை செய்யப்படவிருக்கிறது.

இதற்கான அறிவித்தலை, கொழும்பு மாநகரசபை ஆணையாளர் நேற்று விசேட வர்த்தமானியில் வெளியிட்டுள்ளார்.

2 லட்சத்து 32 ஆயிரத்து 142 ரூபா 77 சதம், கடன் ஏற்பட்டுள்ளதனால்தான், இக்கட்டிடங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவிருக்கிறது.

'டைம்ஸ்' பத்திரிகை நிறுவனத்திற்குச் சொந்தமான பிறிஸ்டல் வீதியிலுள்ள கட்டிடமும், முதலிகேமாவத்தையிலுள்ள கட்டிடமுமே ஏலத்தில் விற்பனைசெய்யப்படும்.

76-ம் ஆண்டே ஏலத்தில் விற்பனை செய்யப்படவிருந்ததாகவும் அப்போதைய மேயர் தடுத்து நிறுத்திவைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

75-ம் ஆண்டு டைம்ஸ் நிறுவனத்திடமிருந்து 2000 ரூபாவிற்கு காசோலை அனுப்பப்பட்டிருந்ததாகவும் ஆனால், வங்கியில் பணமில்லையெனத் தெரிய வந்ததாகவும் கூறப்படுகிறது.

76 ஏப்ரல் 22ம் திகதி ஏலவிற்பனைபற்றி அறிவிக்கப்பட்டதாகவும், பதில் ஏதும் கிடைக்கவில்லையெனவும் மேலும் கூறப்படுகிறது. (ம)

# நினைவு தினம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 12-ம் தேதி ஹர்த்தால் நினைவுதினத்தைக் கொண்டாட சமசமாஜக்கட்சி ஏற்பாடு செய்துவருகிறது.

# ஜெயப்பிரகாஷை எம்ஜிஆர் அவதூறாக பேசினாராம்

## கண்டனக் கூட்டங்கள் நடத்த ஏற்பாடு

சென்னை, ஆக. 2 தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணையும் அவரது இயக்கத்தையும் அவதூறாக பேசியதையிட்டு, தமிழ்நாடுமக்கள் குழு கண்டனக் கூட்டங்களை தமிழ்நாடெங்கும் ஒழுங்கு செய்துள்ளது.

தமிழ்நாடு மக்கள்குழு செயலாளர் திரு. ஆர். சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் திட்டமிட்டு சர்வோதய இயக்கத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணையும், அவரது பிஹார் இயக்கத்தையும், இழிவுபடுத்தும் முயற்சியாக, சட்டமன்றத்தின் உரையில் குறிப்பிட்டார். தமிழக முதல்வர் இது விடயத்தில் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

எம். ஜி. ஆரின் தவறான கூற்றை மக்களுக்கு தெளிவுபடுத்தவே தாம் கண்டனக் கூட்டங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் திரு. சுப்பிரமணியம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (கெ-இ)

## 9 கொள்ளையர் சரண்!

புதுடில்லி, ஆகஸ்ட். 2 40-க்கு மேலான கொள்ளை, சூறையில் குற்றங்கள் தொடர்பாக நீண்ட நாட்களாகத் தேடப்பட்டுவந்த 9 கொள்ளைக்காரர்கள் தேசபிதா மகாத்மா காந்தி சிலைக்கு முன்னிலையில் தமது ஆயுதங்களை வைத்து பொலிசாரிடம் சரணடைந்தனர்.

14 கொள்ளைச் சம்பவங்கள், 5 சூறையாடல் சம்பவங்கள், மற்றும் 23 குற்றங்கள் தொடர்பாக இவர்கள் 9பேரையும் கடந்த 5 ஆண்டுகளாக பொலிசார் தேடிவந்தனர். (இ)

### சென்னை சிறைச்சாலைக் கொடுமை

## இஸ்மயில் கமிஷன் முன் ஆஜராகுமாறு பக்தவத்சலத்துக்கு உத்தரவு

சென்னை, ஆக. 2 அவசரகாலநிலை அமுலிலிருந்தபோது சென்னை சிறைச்சாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கொடுமைகள் குறித்து விசாரணைசெய்துவரும் தனிநபர்கமிஷன் முன்னிலையில் ஆஜராகுமாறு முன்னாள் தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு எம். பக்தவத்சலத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவருடன் முன்னாள் உள்துறை காரியதரிசி திரு. கே. சுப்பிரமணியம் பொலிஸ் கமிஷனர் திரு. பரமகுரு உட்பட வேறுசில அதிகாரிகளுக்கும் கமிஷன்முன் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிபதி திரு. எம். எம். இஸ்மயில் முன்னிலையில் நடைபெறும் இவ்விசாரணையின் போது சாட்சியமளித்த முன்னாள் சட்டசபை உறுப்பினர் திரு. ஆற்காடு வீரசாமி, முன்னாள் முதல்அமைச்சர் திரு. எம். பக்தவத்சலத்தின் உதவியுடன் தமது இடமாற்றத்தை ரத்துச்செய்ய உள்ளதாக ஜெயில் சுப்ரிண்டன் தம்மிடம் தெரிவித்தார் என்று கூறியிருந்தார்.

இதைஅடுத்தே திரு. பக்தவத்சலம் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளார் என்று தெரிகிறது.

சிறைச்சாலையில் திரு. பக்தவத்சலத்தின் தூண்டுதலின் பேரில்தான் கைதிகள் துன்புறுத்தப்பட்டார்களா என்று விசாரணையின் ஒரு கட்டத்தில் வழக்கறிஞர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு ஜெயிலர் திரு. எம். யு.வையும் மறுப்புத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### பக்தவத்சலம் தாக்குதலுக்கு தூண்டினாரா?

முன்னைய சாட்சியங்களில் சில விபரங்கள்பொய்யானவை என்றும் மிஸா கைதியாகிய ஆசைத்தம்பியை 'புத்தி இருக்காடா?' 'அறிவுஇருக்காடா?' எனக்கேட்டு தாக்கியதாகவும் அந்த ஜெயிலர் ஒப்புக்கொண்டிருந்தார். (இ)

......

## 100 வயது கட்டடத்தில் தீ!

பெங்களூர், ஆக. 2 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கர்நாடக மாநில உயர்நீதிமன்றத்தில் திடீரென தீப்பற்றிக்கொண்டதை அடுத்து தியணைக்கும் படையினர் மிகவும் தீரமுடன் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். [கெ-இ]

### வேல் விழாவில்

## முடிச்சுமாறிகள் உதவியுடன் 20 பேர் கைது

கொழும்பு, புதன் வேல் விழாவில் கலந்துகொண்ட பெருந்திரளான மக்கள் மத்தியில் முடிச்சுமாறிகளின் கைவரிசையை, ஐந்து முடிச்சுமாறிகளின் உதவியுடன் பொலிசார் தடைசெய்து 20 பேரைக் கைதுசெய்தனர்.

இவ்விழாவில் எதுவித அசம்பாவிதங்களும் நிகழவில்லை எனவும் பொலிசார் தீவிர பாதுகாப்பை மேற்கொண்டிருந்தனரென்றும் கூறப்படுகின்றது.

திருடர்களைக் கொண்டு திருடர்களைப் பிடிக்கும் புதிய முறையைப் பொலிசார் இவ்விழாவில் கையாண்டனர்.

முன்னைய ஆண்டுகளைப் பார்க்கிலும் இவ்வாண்டு முடிச்சுமாறிகளின் தொகை குறைந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். (ம-அ)

.....

## குருபூர்ணிமா விழாவில் இன்று

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் திவ்யஜீவன சங்கம் நடாத்தும் குருபூர்ணிமா விழா 5-வது நாளான இன்று மாலை திருமதி. மனோன்மணி, சண்முகதாஸின் சொற்பொழிவும், செல்வன் சி. மாணிக்க ராஜாவின் பண்ணிசையும் இடம்பெறும். (கெ-அ)

...

## பாக். தேர்தல் அக். 18-ல்

இஸ்லாமாபாத். ஆக 2 பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் அக்டோபர் மாதம் 18-ம் திகதி நடைபெறும் என்று பாகிஸ்தான் வானொலி இன்று அறிவித்தது.

அரசியல் கட்சிகள் தங்கள் தேர்தல் பிரச்சாரங்களை இன்று ஆரம்பித்தன.

## அ.இ.அ.தி.மு.க உறுப்பினர் ரூ.9,0000 அரிசி கடத்தினாராம்

### 'சிவப்பு நாடா' பத்திரிகை செய்தி

சென்னை, ஆக. 2 தமிழ்நாடு சட்டசபைஅ.இ.அ.தி.மு.க.உறுப்பினர் திரு. உய்யங்கொண்டான் 90 ஆயிரம் ரூபா பெறுமதியான அரிசியை தமிழ் நாட்டிலிருந்து கேரளாவுக்குக் கடத்தினாராம்.

சென்னையில் வெளியாகும் 'சிவப்பு நாடா' பத்திரிகைஇச் செய்தியை வெளியிட்டது.

மேலும் அச்செய்திகளில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"திரு. உய்யங் கொண்டானின் ஏற்பாட்டின் பேரில் தமிழ் நாட்டிலிருந்து இந்த அரிசி 6 லொறிகளில் கேரளாவுக்கு கடத்திச் செல்லப்பட்ட சமயம் சேலம் சிவில் சப்ளை அதிகாரிகளிடம் அகப்பட்டுக் கொண்டாரென்றும் இச்செய்தி சட்டசபை உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர் அதிகாரிகளைப் பயமுறுத்தி அரிசியை விடும்படி பணித்தும் அவர்கள் அரிசியைவிடமறுத்து விட்டனர்" என்றும் அந்தப் பத்திரிகைச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கெ-இ)

## இலங்கை பற்றி தெளிவான கருத்துக் கொண்டவர்

### அமெரிக்க தூதுவர் பற்றி யு. எஸ். பிரதிஅமைச்சர்

வாஷிங்டன், அக. 2 இலங்கைக்குப் புதிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஹோவார்ட் ரிக்கின்ஸ் "சர்வதேச விவகாரங்களில் மட்டுமன்றி மனித உரிமைகள் விஷயத்திலும் இலங்கையைப் பற்றி ஆழ்ந்த, தெளிவான கருத்துக்கொண்டவர். 'அமெரிக்கா எதைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்பதையும் அவர் நன்கு புரிந்துகொண்டுள்ளார்"

புதிய தூதுவர் திரு. ரிக்கின்ஸ் அமெரிக்க ராஜாங்க அமைச்சில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டபோது இடம்பெற்ற வைபவத்தில் பேசிய உதவி ராஜாங்க அமைச்சர் திரு. பிலிப் சி ஹபீப் இவ்வாறு தெரிவித்தார்.

தெற்காசிய விவகார நிபுணரான திரு. ரிக்கின்ஸ் இந்தத் தூதுவர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

"இருநாடுகளுக்கும் இடையில் விரிவான நட்புறவு ஏற்பட திரு ரிக்கின்ஸ் உதவுவார்" என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அமெரிக்காவில் இலங்கைத் தூதுவராக இருக்கும் திரு. நெவில் கனகரட்ன, தூதரக அதிகாரி திரு. ஜோர்ஜ்செனவிரட்ன, முதலாவதுசெயலாளர் திரு. ஜயந்த தனபால ஆகியோரும் பிரஸ்தாப வைபவத்தில் கலந்துகொண்டனர்.

"இலங்கையில் என்ன நடக்கிறது என்பது பற்றிய எனது அபிப்பிராயங்களை இங்குள்ள மக்களுக்கு அறியத் தருவதற்கு நான் முயற்சி செய்வேன். அமெரிக்காவில் நாம் விஷயங்களை எப்படி நோக்குகிறோம் என்பதை இலங்கையில் உள்ள எனது நண்பர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு நான் என்னால் இயன்றதைச் செய்வேன்" என்று புதிய தூதுவர் வைபவத்தில் பேசும்போது கூறினார். (இ)



# "கூட்டணி திட்டங்கள் சர்வதேச சோஷலிஸ திட்டத்திற் கிணையானவை"

சங்கானை, செவ்.

"தமிழர் விடுதலைக்கூட்டணியினால் வெளிவிடப்பட்டுள்ள திட்டங்கள் சர்வதேசரீதியான சோசலிச அமைப்புத்திட்டங்களுக்கு இணைந்தனவாகவுள்ளன. தமிழ் ஈழம் சோஷலிச முன்னணி அமைப்பில் திரு.வி. பொன்னம்பலமும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவரான திரு. அ.அமிர்தலிங்கமும் எடுத்துவரும் கூட்டு நடவடிக்கைகள் தனனுதிக்கமுள்ள சுய நிர்ணய தமிழ் ஈழம் மலர்வதற்கு ஒரு தகுந்த விமோசனப்பாதையை வகுத்துத்தரவல்லன"

இவ்வாறு திரு.ச.கந்தசாமி சங்கானையில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். திரு.க. பொன்னம்பலம் தலைமையில் தபால் நிலையத்திற்கருகாமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு.கந்தசாமி மேலும் கூறியதாவது:

"நீண்டகாலமாக இடதுசாரி ஐக்கிய அணிகளில் களைப்புற்ற அனுபவவாதிகளும் போர்களத்தில் குதித்துள்ள விடுதலை இளங்காளைகளும் ஓர் அணிதிரண்டு போராடும்வாய்ப்புத்தற்போது அமைந்துள்ளது. அதேவேளை தென் இலங்கையில் இடதுசாரித் தலைமைகளால் ஏற்பட்ட பழிநிலைகளிலிருந்து விடுதலை நோக்கிய இளம் சந்ததிகளும் இந்தப்பேரணிக்கு மிகப்பெரும் ஆதரவாளர்களாக அமைவர். ஆகவே எமது போராட்டப் பாதை எவ்வித பின்னீடுமின்றி வெற்றிதருவதாயுள்ளது.

கலைக்கப்பட்ட ஸ்தலஸ்தாபனத் தேர்களிலும் இக் கூட்டுக் கட்டுப்பாடு வெற்றிகரமாகச் செயல்பட சகலவகைகளிலும் ஆவன செய்யப்படவேண்டும், சிறந்த தலைமையைக் கொண்ட இயக்கங்கள் இலட்சியப்பாதையில் வெற்றிபெறுவது உண்மை. இதனையே நாம் சரித்திரவாயிலாக அறிகின்றோம். குறிப்பாக இளைஞர் சமுதாயம் பொதுநல சமூக சேவைகளில் அக்கறை கொண்டு இனவிடுதலைக்கும் நாட்டின் நன்மை கருதியும் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு உழைத்தல் அவசியம்"

திரு.பொன்னம்பலம் பேசுகையில்,இளைஞர் சமுதாயம் எமது பட்டினசபை எல்லைக்குட்பட்ட அபிவிருத்தி வேலைகளில் அக்கறை கொண்டு அவைகளை சிரமதானப்பணியில் நிறைவேற்றவும் இனவிடுதலை போன்றவற்றிலும் ஒன்றுபட்டுழைத்தல் வேண்டும். படித்த வாலிபர்கள் காலத்தை வீண் போக்காது பண்ணை வளர்ப்பு சிறுகைத்தொழில் போன்றவற்றில் ஈடுபடவேண்டும். அரசை எதிர்பாராமலே வேலைவாய்ப்பை நாம் ஆக்கிக் கொள்ளல் வேண்டும்" என்றார். (அ)

# "கூட்டுறவு இயக்கம் அரசியலுடன் கலக்கக் கூடாது"

யாழ்ப்பாணம், புதன்

"கூட்டுறவு இயக்கம் அரசியல், இன, மதபேதமற்ற ஒன்று. இந்த இயக்கத்தில் கடமையாற்றும் பணியாளர்கள் இதனை அரசியலுடன் கலக்கக்கூடாது. பணியாளர்கள் தாங்கள் பணியாற்றும் சங்கங்களுக்கு விசுவாசமாக உழைப்பதுடன் சங்கம் தங்களுடையதே என்ற மனப்பான்மையுடன் கடமையாற்ற வேண்டும்."

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் இயக்குநர் சபைத் தலைவர் திரு. இ. பொ. குமாரசாமி ஊழியர்களினால் அளிக்கப்பட்ட தேநீர் விருந்து வைபவத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வைபவத்திற்கு ஊழியர் சங்கத் தலைவர் க. நா. சுப்பிரமணியம் தலைமைவகித்தார். திரு. எம். வாமதேவன் பேசுகையில், "பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டபோது நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் திருநெல்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாக ஆரம்பிக்கப்பட்டது. யாழ். மாவட்டத்தில் புனரமைக்கப்பட்டுள்ள 22 சங்கங்களுக்குள் நல்லூர் ப. நோ. கூ. சங்கம் புதிய சங்கமாக இருந்தபோதும் அண்மையில் நடாத்தப்பட்ட போட்டியில் 3-வது இடத்தை வகித்தமை இயக்குநர் சபையின் திறமையான மேற்பார்வையும், கடின உழைப்பும், பணியாளர்களின் நேர்மையான கடமையுமேயாகும்" என்று கூறினார்.

இவ்வைபவத்தில் கூட்டுறவுப் பரிசோதகர் எம். எஸ். தர்மலிங்கம், திரு. இ. கந்தையா, திரு. ச. பரந்தாமு, திரு. கே. சிவஞானம் ஆகியோரும் பேசினர். (கு-அ)

சங்கானை, செவ்.

சங்கானை ப.நோ.கூ. சங்கத்தில் விநியோகிக்கப்படும் மாவு, "ஈஸ்ற்" ஆகியன தரங்கெட்டனவாம். இதனால் இப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பாண் துர்நாற்றம் வீசுவதாகவும் தரத்தில் குறைந்து உள்ளதாகவும் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. (அ)

# பஸ் தொழிலாளர் கழகம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை பஸ் தொழிலாளர் கழக ஆண்டுப் பொது கூட்டம் நேற்று முன்தினம் ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

கடந்த அரசாங்கம் அங்கீகாரம் தரமறுத்ததால் இந்தக் கழகம் இயங்காமல் இருந்தது. இப்பொழுது மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இக்கழகத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்

போஷகர்: மு. சிவசிதம்பரம் எம். பி., தலைவர்: வி. யோகேஸ்வரன் எம். பி., உபதலைவர்கள்: வே. சுப்பிரமணியம், க. அருளானந்தம், பொதுச்செயலாளர்: மு. ஆலாலசுந்தரம், பொருளாளர்: சி. கதிரவேலுப்பிள்ளை எம். பி.

இவை தவிர நிர்வாகிகளாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (கு-அ)

......

# யாழ்ப்பாணம் திருநெல்வேலி ப. நோ.கூ. சங்கங்கள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக உதவி அரசாங்க அதிபர் திரு. எல். பற்றிக் நியமிக்கப்பட்டுள்ளார். இவருடன் யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்திச்சபையைச் சேர்ந்த திருவாளர்கள் கொன்ஸ்ரன்ரைன் எஸ். ஏ. மகேஸ்வரன் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்திற்கு யாழ்ப்பாண மாவட்ட காணிஅதிகாரி திரு. ஏ. எம். குலநாயகம் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த தலைமைக்காரியாலயப் பரிசோதகர்கள் திரு. எம். செல்வராஜா, திரு. ஆர். ஜெகநாதன் ஆகியோருடன் திருநெல்வேலி விவசாயப்போதனாசிரியர் திரு. வி. கதிரமலையும் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்களுடன் ஏற்கவே இயக்குநர்சபையில் அங்கம் வகித்த பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் அடங்குவர்.

இப்புதிய குழு நேற்று உத்தியோகபூர்வமான கடமையை ஏற்பதற்காக சங்கத்திற்கு விஜயம் செய்தது. இவர்களுடன் யாழ்ப்பாணக் கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் திரு. எஸ். ஜெயகாந்தன், திரு.எஸ். நாகலிங்கம் ஆகியோரும் சென்றிருந்தனர். (கு-அ)

# ஜனதின பஸ்கள் மூலம் விநியோகம்

கொழும்பு, செவ்வாய்

"பத்திரிகைச் சுதந்திரத்தை நாம் பாதுகாப்போம். இந்த அரசு சகலருக்கும் சகல ஜனநாயக உரிமைகளையும் வழங்கும்."

இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மத், சமசமாஜக்கட்சியின் பத்திரிகை பஸ்கள் மூலம் விநியோகம் செய்ய அனுமதித்தபோது கூறினார்.

கடந்த அரசாங்க காலத்தின்போது சமசமாஜக் கட்சியின் பத்திரிகை பஸ்கள் மூலம் விநியோகம் செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. (அ)

# "தலைவர்கள் மட்டும் இயக்கம் நடத்த முடியாது"

—அமிர்

மாவிட்டபுரம், செவ்வாய்

"தலைவர்களாகிய நாம் மட்டும் இயக்கம் நடத்திவிட முடியாது. பொதுமக்களும் பார்வையாளராக மட்டும் இராது பங்காளர்களாகவும் இயக்கத்தில் ஈடுபடவேண்டும். அதற்காக அவர்களைத் தயார் செய்யவேண்டிய பொறுப்பு எம்மைச் சார்ந்தது. மக்களைத் தயார் செய்த பின்பே எமது இலட்சியப்பாதையில் தீவிரம் ஏற்பட வழி பிறக்கும்."

இவ்வாறு பன்னாலை கணேசா சனசமூக நிலைய முன்றலில் காங்கேசன்துறைப் பிரதிநிதியாகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் தெரிவான தம்மை பாராட்டிக் கௌரவிக்குமுகமாக நடந்த பாராட்டுக் கூட்டத்தில் பேசுகையில் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

திரு. சி. சின்னத்தம்பு தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

காங்கேசன்துறைத் தொகுதி மக்கள் என்னை அதிகப்படியான வாக்குகள் அளித்துத் தெரிவுசெய்தமையும், எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்மீது சுமத்தப்பட்டமையும் மக்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது. எம். பி. யாக வராமல் கடந்த 7 வருடமும் என்னால் எவ்வளவு தூரம் அதிக சேவை செய்ய முடிந்ததோ அதேபோன்று தொடர்ந்தும் இயங்குவதாகவே தீர்மானித்திருந்த போதும் கூட்டணியின் ஒற்றுமை கருதி இறுதியில் நான் தேர்தலில் நிற்கவேண்டி ஏற்பட்டது. மக்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கை வீண் போகவிடமாட்டேன். மக்கள் நம்பிக்கையே எனக்குப் பெரிதே தவிர எனது சட்டத்தரணித் தொழில் அல்ல, இச் சட்டத்தரணித் தொழிலையும் துறந்து எனது சேவையை முழுநேர ஊழியனாக இருந்து செய்ய முடிவுசெய்துள்ளேன். தமிழ்மக்களது சுதந்திர நல்வாழ்வுக்காக எதையும் தியாகம் செய்யவும் நான் தயாராய் இருக்கின்றேன்"

வட்டுக்கோட்டை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது:- மக்கள் அளித்த தீர்ப்பினை ஏற்று அவ்வழியில் செயல்படப்போகும் நாம் எமது பகுதிகளின் அபிவிருத்திகளிலும் கவனம் செலுத்த வேண்டிய நிலையிலுள்ளோம். இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த அரசுகளால் எமது பகுதிகள் புறக்கணிக்கப்பட்டுவந்ததை நாம் அறிவோம். ஆகவே அரசை நம்பிருந்தால் எமது தமிழ்ப்பகுதிகள் முன்னேற முடியாது. அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயல்படுத்த நாம் முயற்சிக்கவேண்டும்.

சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு பேசுகையில், இந்த அரசாங்கம் எம்மை எனைமாதிரி நடத்தப்போகிறது என்பதை பாராளுமன்றம் கூடியவுடன் பிரதமர் ஆற்றும் பிரசங்கத்தில் இருந்து அறியலாம். எந்த அரசாங்கமும் எமது பிரச்சனையில் ஒரே மாதிரியான நிலையைத்தான் கடைப்பிடித்து வரும் என்பது நாம் கண்ட அனுபவமாகும். எமது சுதந்திரத்தை நிலைநாட்டி, சுதந்திர புருஷர்களாக வாழ்வதற்கு நாமே வழிசமைக்கவேண்டும். அதற்கான பாதையில் முன்னேறிச் செல்வோம் என்றார்.

மற்றும் திருமதி அமிர்தலிங்கம், மாவை. சேனாதிராசா, திரு. இறைகுமாரன் உட்படப் பலர் பேசினர்.



நாகம்மஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
மஞ்சள் மகிமை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30
THE ARENA

87-வது நாள்
ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா
நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

RIO (Jaffna) Now Showing
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
ACTION THRILL
in
DARING DOZEN

கடைசிவாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவராம், கீதாஞ்சலி,
தர்மலிங்கம், ஸ்ரீதேவி
நடித்த
ஜெயேந்திரா மூவிஸ்
காத்திருப்பேன் உனக்காக

கடைசி வாரம்
86-வது தினம்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன் - சௌகார்ஜானகி - நாகேஷ்
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் சுப தினம்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்: 7693 (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் — சுஜாதா
நீ ஒரு மகாராணி

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-45
எம். ஜி. ஆர்.-லதா - நாகேஷ் அறிமுகம் பவானி
தங்கவேலு தேங்காய்சீனிவாசன்
நடித்த
கே. சி பிலிம்ஸ் அளிக்கும்
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

## சிறுவனைப் பயமுறுத்தி மோதிரம் அபேஸ்!

யாழ்ப்பாணம், புதன்

பட்டப்பகலில் 12 வயதுச் சிறுவனை, அழைத்து மூன்று நபர்கள் பயமுறுத்தி, அவனது கையிலிருந்த 2 மோதிரங்களையும், பணத்தையும், அபகரித்துச் சென்றனர் இச்சம்பவம், நேற்று மூன்தினம் யாழ்ப்பாணம் கே. கே: எஸ். வீதியில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியால் வந்துகொண்டிருந்த இச்சிறுவனை பிரஸ்தாப மூன்று நபர்களும் அழைத்து அவரைப் பயமுறுத்தி மோதிரங்களையும் பணத்தையும் அபகரித்தனர். ஆனால் அந்த மூவரில் ஒருவரெனச் சந்தேகிக்கப்படும் ஒருவரைப் பொது மக்கள் கலைத்துப்பிடித்து யாழ். பொலிசில் ஒப்படைத்தனர். (கே-அ)

## அரசியல் குரோத வாலிபர் கொலை

மாத்தறை, செவ்

அரசியல் கருத்துவேறுபாடு காரணமாக ஐ. தே. க. ஆதரவாளர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கனேகமமே ஹக்மனகே சிரிபால (19 வயது) என்ற இக் கம்புறுப்பிட்டிய வாசி சம்பவதினத்தன்று மற்றும் ஐ. தே. க. ஆதரவாளர்களுடன் ஊர்வலம் ஒன்றிற்கு தலைமைதாங்கிச் சென்றபோது துப்பாக்கிக் குண்டு இவரது உடலில்பாய்ந்தது.

மாத்தறை ஆஸ்பத்திரிக்கு இவர் விரையப்படுகையில் அவரது உயிர் வழியில் பிரிந்ததாம்.

இக்கொலை தொடர்பாக மூவர் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (உ)

## இளைஞர் முன்னேற்றக் கழகம்

சித்தன்கேணி, செவ்.

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழக நடப்புவருட நிர்வாகிகள்விபரம் வருமாறு:-

தலைவர் பூ. சிவசிதம்பரம், உபதலைவர் சு. சிவராசா, செயலாளர் கா. இராசகுமாரன், உப செயலாளர் சு. சோமாஸ்கந்தமூர்த்தி, பொருளாளர் இ. தவராசா, உப பொருளாளர் ஆ. அமிர்தலிங்கம், விளையாட்டுக் காரியதரிசி ச. சிவகுமாரன் நூலகப் பொறுப்பாளர் மு. ஜெயசேகரன், கலாச்சாரப் பொறுப்பாளர் மா. மாணிக்கவாசகர், மேலதிக நிர்வாகி க. தில்லைவாசன். (சி)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி, சரோஜாதேவி
தாமரை நெஞ்சம்

REGAL (JAFFNA) 2-nd WEEK
Daily at 4-45, 7-00 & 9-30 p.m.
NORMAN WISDOM IN
"ON THE BEAT"
FULL COMEDY

4-8-77
Christian Fechner the Creator of the "Crazyboys" now Presents his Most Hilarious Comedy to Date!
PIERRE RICHARD JANE BIRKIN
in
Claudezidis
"THE GOOSE CHASE"
Color

## தேர்தல் தற்கொலை

கொழும்பு, செவ்.

தேர்தல் பந்தயம் பிடித்து தோல்வியுற்ற வாலிபர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலைசெய்துகொண்டார்.

சுதந்திரக்கட்சி வெற்றி பெறும் எனப்பந்தயம் பிடித்த வரகாபிட்டியாவைச் சேர்ந்த ஏ. சுமதிபாலா என்ற வாலிபர் சுதந்திரக்கட்சி படுதோல்வியடைந்ததைதொடர்ந்து தற்கொலை செய்துகொண்டார்.

---

இ. சதானந்தன்,
சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ்,
புலோலி தெற்கு, புலோலி.

## இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்.

பருத்தித்துறை, புலோலி மேற்கு, அருணசலம் வெற்றிவேலுவின் மரண சாதனத்தின்படி,

வலயம்-யாழ்ப்பாணம்,
இல: 355.

வெற்றிவேலு கதிரவேற்பிள்ளை, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

மனுதார்.

எதிர்.

1. வெற்றிவேலு சிதம்பரநடராசா, மக்கள் வங்கி, அக்கரைப்பற்று.
2. வெற்றிவேலு மகள் விசாலாட்சி புலோலி மேற்கு, பருத்தித்துறை.

எதிர் மனுதார்.

280ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 1977ம் ஆண்டு வைகாசி மாதம் 3ம் திகதி இடப்பட்டதுமான கூற்றுக்களைப் பார்த்தமாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது எனத் திருப்தியடைந்ததின் பேரில் 1977ம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக எவராவது எதிர்க்காரணம் காட்டினாலன்றி 1977ம் ஆண்டு பங்குனி மாதம் 17ம் திகதி நொத்தாரிஸ் இ. சதானந்தன் முகதாவில் 2749ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் அதன் மூலப்பிரதி இவ்வலுவலகத்தில் இப்போது சமர்ப்பிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டதுமான மரணசாதனம் நிரூபிக்கப்பட்டுள்ளதென்றும், மேற்படி மரணசாதனத்தில் சொல்லியபடி நிறைவேற்றுவராக விண்ணப்பகாரன் அதிகாரத்தைப் பெறுவதற்கு உரிமை உடையவரென்றும் அவ்வண்ணமே மரணசாதன அதிகாரப் பத்திரம் விண்ணப்பகாரிக்கு வழங்கப்படுமென்றும் யாழ்ப்பாண நீதி நிருவாகத்தின் தத்துவப் பகிரங்க அதிகாரி கா. கணபதிப்பிள்ளையாகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செயற்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன்.

கா. கணபதிப்பிள்ளை
தத்துவ அதிகாரி

1977ம் ஆண்டு ஆனி மாதம் 24ந் திகதி. 6756

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

5 அந்தர் லேட்டஸ்ட் அவெறி தராசு விற்பனைக்கு இருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ண ரேட்ஸ், 92, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 6735

யாழ். கச்சேரி பாடசாலைகளுக்கும் அருகாமையில் ரக்காரோட், சுண்டிக்குளியில் 2 பரப்புக்குமேல் உள்ள காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: டாக்டர் ஏனஸ்ட் சம்பியன், 33, சுவாட்ஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி. 6759

### தேவை

வார்ப்பு வேலை, லேத்வேலை, கம்மாலைவேலை, வெல்டிங் வேலை, பிற்றிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில்வரவும்: ராதாமெசின் கம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6755

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள ஒெல்பர், பவுளர் (Helpers & Bubblers) தேவை. வேலைக்கேற்ற நல்ல சம்பளம் கொடுக்கப்படும். வேலை பழகுபவர்களும், பழக்கப்படுபவர்களும் உடனடியாகத் தேவை. உடனே நேரில் வரவும். சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 6738

## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் (கொடிகாமம்) 6000க்கு மேலான வெற்றுச் சாக்குகளும் 500க்கு மேற்பட்ட மாப் பை முதலியன கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 150/- முற்பணம் கட்டிக் கேள்விப்பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும். 15-8-77ந்திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணி வரை பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பொருட்களைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்
தென்மராட்சி கிழக்கு
ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம்,
1-8-77. 6758

## சாவகச்சேரிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## சாக்கு விற்பனை

இச்சங்கத்திலுள்ள 4000 வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்வதற்குக் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளைச் சங்கத்தால் வழங்கப்படும் கேள்விப் பத்திரத்தில் 10-8-77 மு.ப. 11-00 மணிக்கு முன் சங்கத்தில் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் மெழுகிட்ட தபாலுறையில் "சாக்குக் கேள்விப்பத்திரம்" என எழுதி அனுப்பவேண்டும். கேள்விப்பத்திரங்களை வைப்புப் பணம் ரூபா 300/ம் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 5/-ம் செலுத்தி 9-8-77 வரை சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்
சாவகச்சேரி,
1-8-77. 6757

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# ஈழநாடு

THE EELANADU


## பாடப்புத்தகங்கள் மறுபரிசீலனை!

### பிரதிக்கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, செவ்வாய்
பாடசாலை பிள்ளைகளின் பாடப்புத்தகங்கள் மறுபரிசீலனை செய்யப்படும் என்று பிரதிக் கல்விஅமைச்சர் திரு. லயனல் ஜெயதிலக தெரிவித்தார்.

6-ம் வகுப்பிலிருந்து 9-ம் வகுப்புவரையிலான மாணவர்களின் சமூகக் கல்வி நூல்கள் அவசியம் ஏற்படின் திருத்தி அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## திறமையின் அடிப்படையில் பதவிக் காலம் நீடிப்பு

கொழும்பு, செவ்வாய்
அரசாங்க ஊழியர்களுக்கு 55 வயதிற்குப்பின்னரும் பதவி நீடிப்பு வழங்குவது பற்றிமறு பரிசீலனை செய்ய அரசுமுடிவு செய்துள்ளது.

திறமை, தகுதி அடிப்படையிலேயே இந்த பதவி ஊர்ப்பு வழங்கப்படும், மற்றும் எக்காரணமும் கவனத்திற்கெடுக்கப்படாது.

பொது நிர்வாக அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரமா நேற்று அமைச்சில் நடந்த கூட்டமொன்றில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சர் மொண்டேகு ஜெயவிக்கிரம மேலும் கூறிய தாவது:முடியுமானவரை ஊழியரை பதவியில் நீடித்துவைத்திருப்பது அரசின் கொள்கையாகும். பதவி உயர்வு பெறும் நிலையிலுள்ளவர்களையும், வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போர்களையும் கவனத்தில் கொண்டு இக் கொள்கை அமுல் நடத்தப்படும்.

## உள்ளூராட்சிமன்ற ஊழல்கள் விசாரிக்க கமிஷன்

### அமைச்சர் பிரேமதாச தகவல்

கொழும்பு, செவ்.
உள்ளூராட்சி மன்றங்களில் நடைபெற்றுள்ள ஊழல், மோசடி, நிர்வாகச் சீர்கேடு லஞ்சம் பற்றி விசாரணைசெய்ய இளைப்பாறிய நீதிபதி தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும்.

கொழும்பு புதிய நகரமண்டபத்தில், கொழும்பு மத்தி வாக்காளர்களினால் நடத்தப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் பேசிய உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பிரேமதாசா மேலும் கூறியதாவது:

1969-ம் ஆண்டு முதல் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடைபெறவில்லை. இக்காலத்தில் பல ஊழல்கள் இடம்பெற்றுள்ளதுதான் என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தங்கள் ஆசைநாயகிகளுக்கு வீடுகள் பெற்றுக்கொடுத்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

எமது ஆதரவாளர்கள், இத்தகைய சம்பவங்களால் பாடம் படிக்கவேண்டும் என்பதற்காகவே இவற்றைக்கூறுகிறேன். (அ)

### ச. ச. நிலையத்திற்கு மின்னிணைப்பு

பண்டத்தரிப்பு, செவ்வாய்
பண்டத்தரிப்புப் பட்டணசபைப் பிரதேசத்திலுள்ள சங்கானை மேற்கு சனசமூக நிலையத்திற்கு மின்சாரவிநியோகம் செய்துகொடுப்பதற்கு மில்க்வைற் தொழிலக அதிபர் "சிவதர்ம வள்ளல்" திரு கனகராசா முன்வந்துள்ளார். இதற்கான நிதியை மேற்படி சனசமூக நிலையத்தின் சார்பில் நிலையச் செயலாளர் திரு. இ. சிவானந்தன் பெற்றுக்கொண்டார். இன்னும் இருவாரங்களுக்கிடையில் மின் இணைப்பு வேலைகள் யாவும் முடிவுறும். (அ)

## 'களியாட்டு விழாவுடன் நிதியுதவியும் சேரும்'

—யோகேஸ்

யாழ்ப்பாணம்,புதன்
"களியாட்டு விழாவைக் கண்டு களிப்பதுடன் புற்றுநோய்த்தடுப்புச் சங்கம் யாழ்ப்பாணத்தில் நிறுவவிருக்கும் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்துக்கும் மக்கள் உதவி செய்தவர்களாவார்கள்" என்று யாழ்ப்பாணம் எம் பி திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் செனற்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் களியாட்டு விழாவைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

செனற்பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாழ். ரோட்டரிக் கழகம் ஆகியவை இணைந்து நடாத்தும் இக்களியாட்டு விழாவில் பல்வேறு வர்த்தக நிலையங்களும் தொழில் நிறுவனங்களும் தங்கள் காட்சிச்சாலைகளை அமைத்துள்ளன. இவை மாணவர்களுக்கும் பெரியோர்களுக்கும் பயன் தருவதாக உள்ளன. இக்காட்சிச் சாலைகள் தவிர மாயாஜால மந்திர ஜாலக் காட்சிகளும் பாதாளக்கிணறு


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelnaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.


## இன்று திறப்பு விழாவும் பொருட் காட்சியும்

யாழ்ப்பாணம், புதன்
இன்று காலை அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை புதிய கட்டடத் திறப்புவிழாவும் பொருட்காட்சியும் நடைபெறுகிறது.

கல்லூரி அதிபர் திரு. சி. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் புதிய காரியாலயத்தை கோப்பாய்த் தொகுதி எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளையும், விஞ்ஞானகூடத்தை உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதமும் திறந்து வைப்பர்.

பாடசாலைக் கொடியேற்றுதலோடு பொருட்காட்சி திறந்துவைத்தலை கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. தங்கராசா மேற்கொள்வார்.

இவர்களுடன் கிராம சேவை உத்தியோகத்தர் திரு. ச. வேலாயுதபிள்ளையும் சிறப்புரைகள் நிகழ்த்துவர்.

(கூ-அ)

## ஈழத்துச் சிதம்பரத்தில் விசேஷ அபிஷேகம்

காரைநகர், செவ்வாய்
வட்டுக்கோட்டைத் தொகுதியின் தேசியப் பேரவை உறுப்பினராக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. தா. திருநாவுக்கரசு தெரிவு செய்யப்பட்டமையைக் குறித்து காரைநகர் மக்கள் நேற்று ஈழத்துச்சிதம்பரத்தில் உள்ள ஐயனுருக்கு பஞ்சவிம்ச கலச அபிஷேகமொன்றைச் செய்தனர்.

பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் நடாத்தப்பட்ட இவ்அபிஷேகத்தை திரு. தா. திருநாவுக்கரசு சங்கற்பம் பூண்டு சிறப்புற நடாத்தி வைத்தார்.

இவ்அபிஷேகத்தின் சிறப்பு நிகழ்ச்சியாக நாச்சிமார் கோவிலடி திரு.கே. கணேசன், அளவையூர் திரு. எஸ். சிதம்பரநாதன், காரையம்பதி திரு. கே. கணேசன் ஆகியோரின் நாதஸ்வர தவில்கச்சேரிகள் இடம்பெற்றன.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள சகல கிராமங்களிலுமிருந்து லொறிகளிலும் கார்களிலும் ஏராளமான மக்கள் வந்து இவ்அபிஷேகத்தில் கலந்துகொண்டு தரிசித்தனர். (அ)

## விண்ணப்ப முடிவு திகதி ஆகஸ்ட் மாதம் 15

யாழ்ப்பாணம், புதன்
யாழ். வயவ்ஸ் கழகம் நடத்தும் தமிழ் - ஆங்கில நாடகப் போட்டி விண்ணப்ப திகதி இம்மாதம் 15-ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த 31-ந் திகதியுடன் முடிவடைவதாக இருந்த இப்போட்டி பல கல்லூரிகளினதும், மன்றங்களினதும் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் 15-ந் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது. (அ)

றில் பயங்கர சைக்கிள் ஓட்டம் பொம்மலாட்டம் சோக்கள், மெல்லிசை, பொப் இசை மூகலியனுரைந்த நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம்பெற்றுள்ளன

## லட்சார்ச்சனை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்
சாவகச்சேரிஉசன் கந்தசாமி கோவில் லட்சார்ச்சனை இன்று மாலை ஆரம்பமாகி தொடர்ந்து ஆறு தினங்கள் நடைபெறவுள்ளது. ஏகதின சங்காபிஷேகம் நிகழும். அன்னதானமும் கதாப்பிரசங்கம், இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும்



வேலர்: சாப்பாட்டுச் சாமான் மலிஞ்சும் ஒரு பத்தியப் பாடில்லை.
மயிலர்: ஏன்
வேலர்: சாப்பாட்டுக்கு மேலே ஒரு தம்மடிக்கவேணும் சுருட்டுவிலையும் நெருப்புவிலையும் இறங்கவில்லை.

சுந்தர்

## துப்பாக்கி காட்டி வங்கியில் லட்ச ரூபா கொள்ளை

கொழும்பு, செவ்வாய்
துப்பாக்கி முனையில் எட்டு இளைஞர்கள் பட்டப்பகலில் இலங்கை வங்கிக் கிளையொன்றில், 98,000 ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இம்பிச வங்கி கிளைக்கு காலை 9 மணிக்கு சைக்கிளில் வந்த 8 இளைஞர்கள், வங்கி ஊழியர்களைத் துப்பாக்கி முனையில் நிறுத்திவிட்டு, இரும்புப் பெட்டியை உடைத்துப் பணத்தைக் கொள்ளையடித்ததாகக் கூறப்படுகிறது.

பணத்துடன் அவர்கள் வங்கியிலிருந்து புறப்பட்டுச் செல்லுமுன், தொலைபேசி வயரை துண்டித்துச் சென்றனர்.

இளைஞர்கள் செல்லும்போது அங்கிருந்த காவலாளர் ஒருவரின் சைக்கிளையும் எடுத்துச் சென்றனர்.

தமபுள்ள பொலிஸார் இராணுவத்தினரின் உதவியை நாடியுள்ளனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

(க-அ)

## ஆசிரியர் தாக்கினாராம் மாணவன் ஆஸ்பத்திரியில்

பாணந்துறை, செவ்.
ஆசிரியர் தாக்கியபோது காயமடைந்ததாகக் கூறப்படும் மாணவர் ஒருவர் பாணந்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாணந்துறை நகரப்பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் 8-ம் வகுப்பில் பயிலும் 13 வயதான ஜெகசிறி சில்வா என்ற மாணவனே காயமடைந்தவராவர்

தான் மற்றிருமாணவனுடன், கல்லூரி வளவில் கதைத்துக்கொண்டிருந்தபோது ஆசிரியர் ஓடிவந்து தன்னைத் தாக்கியதாக அம் மாணவன் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

பொலிசார் சந்தேக நபரான ஆசிரியரைக் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். (க-அ)

## இன்றைய சிறப்பு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், புதன்
யாழ். ரோட்டரிச் சங்கத்தின் களியாட்ட விழா, பொருட்காட்சியின் இன்றைய சிறப்பு நிகழ்ச்சியாக "விவசாயிகள் இரவு" இடம்பெறும். யாழ். ரோமு ஸ்தாபனத்தின் ஆதரவுடன் 'இந்த இரவு' நடக்கிறது.

## இயக்குநர்சபை உறுப்பினர்கள்

கொழும்பு, செவ்வாய்
இலங்கைவங்கியின் இயக்குநர்சபைக்கு 3 புதிய உறுப்பினர்களை நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் நியமித்துள்ளார்.

திருவாளர்கள் டோல்டன் விஜயரத்தின, இங்ஸ்லி டி சில்வா, ஈ.பி. போல் பெரேரா ஆகிய மூவருமே அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருவாளர்கள் கொப்பேகொட, நிஸங்கா விஜயவர்த்தன ஆகிய இருவரும் நிதி அமைச்சரால் மக்கள் வங்கி இயக்குநர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (இ)

வர்த்தக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சகலவெளிநாடுகளும் மூலதனமிடலாமென்றும் அங்கு இலங்கையருக்கு மட்டுமே வேலைவாய்ப்பு வழங்கப்படுமென்றும் அமைச்சர் கூறினார்.

இதன் மூலம் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணி நாட்டின் அபிவிருத்திக்கும் அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதிக்கும் பயன்படும் என்றும் அமைச்சர் கூறினார். (இ)


## நிருபர்கள் தேவை!

'ஈழநாடு' பத்திரிகைக்கு செய்திகள் சேகரித்து அனுப்புவதற்கு வல்வெட்டித்துறை, நெல்லியடி, வவுனியா, திருக்கோணமலை ஆகிய இடங்களுக்கு நிருபர்கள் தேவை. பத்திரிகைத்துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும்